# ஆசிய பசிபிக் மண்டல நாடுகளின் புள்ளி விவரங்கள் மீதான கருத்தரங்கு



( எஸ். ஜீவராஜா - படம் : ஆர்.குணா)

கோலாலம்பூர், டிச. 14-
ஆசிய மற்றும் பசிபிக் மண்டல நாடுகளின் புள்ளி விவர கல்லூரியின் நிர்வாக மன்றக்கூட்டம் நேற்று தொடங்கியது. வரும் டிசம்பர் 15ஆம் தேதி வரை நடைபெறவிருந்த கூட்டத்தில் 32 நாடுகளின் பேராளர்கள் கலந்து கொள்கின்றனர்.

மலேசிய புள்ளி விவர இலாகா மற்றும் பொருளாதார அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மலேசிய புள்ளி விவர இலாகா தலைவர் முகமட் உஸிர் மகிடின் தலைமை வகித்தார்.

வரும் 2025ஆம் ஆண்டிலிருந்து 2029ஆம் ஆண்டு வரையிலான புள்ளி விவரங்கள், வருடாந்திர அடைவு நிலை அறிக்கைகள் வியூக திட்டங்கள் தொடர்பாக விவாதிக்க இந்தக் கூட்டம் நடத்தப்படுவதாக முகமட் உஸிர் தெரிவித்தார்.

ஆசிய மற்றும் பசிபிக் மண்டலத்தில் உள்ள தேசிய புள்ளி விவர தலைவர்கள் தங்களுக்கிடையிலான கருத்துகளையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்வதே இந்த கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மலேசிய புள்ளி விவர பயிற்சிக் கல்லூரி வாயிலாக மற்ற நாடுகளுடன் ஒத்துழைப்பை மேற்கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமைகிறது. புள்ளி விவர துறையில் மேம்பாட்டுத் திட்டங்களை மேம்படுத்துவதற்கு வியூக பங்காளிகளுடன் இணைந்து செயல்படுவோம், குறிப்பாக 2023ஆம் ஆண்டு நிலையான மேம்பாட்டு வளர்ச்சி உறுதி செய்யப்படும் என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சி பொருளாதார அமைச்சின் தலைமைச் செயலாளர் நோர் அஸ்மி, ஐநா பொதுப் பேரவையின் ஆசிய பசிபிக் புள்ளி விவர கல்லூரியின் இயக்குநர் டாக்டர் சைலஜா சர்மா, ஐநா பொதுப் பேரவையின் ஆசிய பசிபிக் மண்டலத்துக்கான பொருளாதார சமூக ஆணையத்தின் பேராளர் ராஷல் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.